**செ.வெ எண்: 14** **நாள்: 09.01.2018**

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

தொழிற்பள்ளிகளில் (IS) சேர்க்கை அறிவிப்பு

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் தனியார் தொழிற்பள்ளிகளில் பொறியியல், பொறியியல் அல்லாத 54 நீண்ட கால தொழிற்பிரிவுகள், 35 குறுகிய கால தொழிற் பிரிவுகள் மற்றும் டி.டி.சி. பயிற்சி ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. புதிதாக தொழிற்பள்ளிகள் துவங்குவதற்கான அங்கீகாரம் வழங்கவும் ஏற்கனவே அங்கீகாரம் பெற்று செயல்பட்டு வரும் தொழிற்பள்ளிகளுக்கு அங்கீகாரம் நீட்டிப்பு ஆணை வழங்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 2ம் தேதி முதல் ஏப்ரல் 30 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தன. 2017 -2018ஆம் ஆண்டு முதல் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் வழியாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மண்டல இணை இயக்குநர்களால் ஆய்வு செய்யப்பட்டு தகுதியுள்ள பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட இணையதள முகவரியில் தற்போது 2018-2019ஆம் ஆண்டு தொழிற்பள்ளிகளுக்கான அங்கீகார நீட்டிப்பு மற்றும் புதிதாக தொழிற்பள்ளிகள் துவங்குவதற்கு விண்ணப்பங்கள் 02.01.2018 முதல் வரவேற்கப்படுகின்றன. இணையதளம் மூலம் அங்கீகாரம் நீட்டிப்பு கோரும் தொழிற்பள்ளிகள் 31.01.2018க்குள்ளும், புதிதாக அங்கீகாரம் கோரும் தொழிற்பள்ளிகள் 30.04.2018க்குள்ளும் விண்ணப்பிக்க வேண்டும். அங்கீகாரம் வழங்கும் முறையை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள இணையதளம் வாயிலாக செயல் படுத்தப்படுவதால் தொழிற்பள்ளிகள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு– செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**